## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## பத்தாம் பத்து
**(அடியார் வருத்தம் தீர்க்கும் எம்பெருமானை, உடம்பு முடிந்தவுடன் பெறும் ப₂லமான அர்ச்சிராதிகதிக்குத் துணையாகக் கொள்ளுதல்)**

## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 10-1 - தாள தாமரை[1]
**(தன் திருவடிகளை அடைந்தார்க்குத் தானே துணையாகின்ற திருமோகூர்க் காளமேகப் பெருமாளை வழித் துணையாகக் கொண்டு, ஆழ்வார் தாம் பிறவித் துயரொழிந்து பரமபதம் அடையக் கருதியதை அருளிச் செய்தல்)**

3667 * தாள தாமரைத் * தட மணி வயல் திருமோகூர் *
நாளும் மேவி நன்கமர்ந்து நின்று * அசுரரைத் தகர்க்கும் **
தோளும் நான்குடைச் * சுரிகுழல் கமலக்கண் கனிவாய் *
காளமேகத்தை அன்றி * மற்றொன்றிலம் கதியே 1

3668 இலம் கதி மற்றொன்று எம்மைக்கும் * ஈன் தண் துழாயின் *
அலங்கலங்கண்ணி * ஆயிரம் பேருடை அம்மான் **
நலங்கொள் நான்மறை வாணர்கள் வாழ் * திருமோகூர் *
நலங்கழல் அவன் அடி நிழல் * தடம் அன்றி யாமே 2

3669 அன்றி யாம் ஒரு புகல் இடம் * இலம் என்றென்று அலற்றி *
நின்று நான்முகன் அரனொடு * தேவர்கள் நாட **
வென்று இம்மூவுலகளித்து * உழல்வான் திருமோகூர் *
நன்று நாம் இனி நணுகுதும் * நமதிடர் கெடவே 3

3670 இடர் கெட எம்மைப் போந்தளியாய் * என்றென்று ஏத்தி *
சுடர் கொள் சோதியைத் * தேவரும் முனிவரும் தொடர **
படர் கொள் பாம்பணைப் * பள்ளி கொள்வான் திருமோகூர் *
இடர் கெட அடி பரவுதும் * தொண்டீர்! வம்மினே 4

3671 தொண்டீர்! வம்மின் * நம் சுடர் ஒளி ஒரு தனி முதல்வன் *
அண்ட மூவுலகளந்தவன் * அணி திருமோகூர் **
எண்டிசையும் ஈன் கரும்பொடு * பெரும் செந்நெல் விளைய *
கொண்ட கோயிலை வலம் செய்து * இங்காடுதும் கூத்தே 5

3672 கூத்தன் கோவலன் * குதற்று வல்லசுரர்கள் கூற்றம் *
ஏத்தும் நங்கட்கும் * அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன் **
வாய்த்த தண்பணை வள வயல் சூழ் * திருமோகூர்
ஆத்தன் * தாமரை அடி அன்றி * மற்றிலம் அரணே 6

[1] இது சில தேசங்களில் கோவில் திருவாய்மொழி

3673 மற்றிலம் அரண் வான் * பெரும் பாழ் தனி முதலா *
சுற்றும் நீர் படைத்து * அதன் வழித் தொல்முனி முதலா **
முற்றும் தேவரோடு * உலகு செய்வான் திருமோகூர் *
சுற்றி நாம் வலம் செய்ய * நம் துயர் கெடும் கடிதே 7

3674 துயர் கெடும் கடிதடைந்து வந்து * அடியவர் தொழுமின் *
உயர் கொள் சோலை * ஒண் தட மணி ஒளி திருமோகூர் **
பெயர்கள் ஆயிரம் உடைய * வல்லரக்கர் புக்கழுந்த *
தயரதன் பெற்ற * மரதக மணித் தடத்தினையே 8

3675 மணித் தடத்தடி மலர்க் கண்கள் * பவளச் செவ்வாய் *
அணிக்கொள் நால் தடந்தோள் * தெய்வம் அசுரரை என்றும் **
துணிக்கும் வல்லரட்டன் * உறை பொழில் திருமோகூர் *
நணித்து நம்முடை நல்லரண் * நாம் அடைந்தனமே 9

3676 நாம் அடைந்த நல்லரண் * நமக்கென்று நல்லமரர் *
தீமை செய்யும் வல்லசுரரை * அஞ்சிச் சென்றடைந்தால் **
காம ரூபம் கொண்டு * எழுந்தளிப்பான் திருமோகூர் *
நாமமே நவின்று எண்ணுமின் * ஏத்துமின் நமர்காள்! 10

3677 * ஏத்துமின் நமர்காள்![2] * என்று தான் குடமாடு
கூத்தனை * குருகூர்ச் சடகோபன் குற்றேவல்கள்[3] **
வாய்த்த ஆயிரத்துள் இவை * வண் திருமோகூர்க்கு *
ஈத்த பத்திவை ஏத்த வல்லார்க்கு * இடர் கெடுமே 11

**அடிவரவு:** தாள் இலம் அன்றி இடர் தொண்டீர் கூத்தன் மற்றிலம்
துயர் மணி நாம் ஏத்துமின் கெடும்

[2] எமர்காள்
[3] குற்றேவல்